ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2051/15 - 2017 දෙසැම්බර් මස 27 වැනි බදාදා - 2017.12.27

*2051/15 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**இலங்கையில் விபத்துக்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்காக தேசிய கொள்கை மற்றும் மூலோபாய திட்டம்**

இலங்கையில் விபத்துக்களை தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துவதற்கான தேசியக் கொள்கை மற்றும் மூலோபாய திட்டத்திற்கு 2017.06.06 ஆந் திகதியன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளதுடன், அது அனுமதிக்கப்பட்ட தினத்தில் இருந்து நடைமுறைக்கு வருகின்றது. நீண்டகால தேசிய தேவைப்பாடாக இருந்த தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத் திட்டம், எதிர்காலத் திட்டம் விபத்துக்களைத் தடுத்தலுக்கான தேசிய கொள்கை கட்டமைப்பிற்குள் தேசிய மற்றும் மாகாண அதிகாரிகளுக்கும் மற்றும் ஏனைய உரிய தரப்பினர்களுக்கும் அது நடைமுறைப்படுத்துவதற்கு வழிகாட்டலாக அமையும்.

ஜனக்க சுகததாஸ,
செயலாளர்,
சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு.

கொழும்பு,
2017, திசெம்பர் 20.

**இலங்கையில் காயங்களைத் தடுத்தல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமான தேசியக் கொள்கையும் தந்திரோபாய உருவரைச் சட்டமும்**

சுகாதாரப் போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சு - 2016

**சுகாதார போசணை மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் தொற்றா நோய்களின் பிரிவு**

**அறிமுகம் :**

பெரும்பாலான மக்கள் காயங்கள் காரணமாகவே மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படுகிறார்கள். அத்தோடு மருத்துவ மனைகளில் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கை அடிப்படையில் காயங்கள் 11 ஆவது இடம் வகிக்கின்றது. நாட்டின் விருத்திக்கு பங்களிப்புச் செய்கின்ற வயதினரே (15-44 வயது) அதிகளவு பாதிப்படைகின்றனர். இப்பாதிப்பானது குடும்பம் சமூகம் என விரிவடையும்.

காயங்களினால் ஏற்படும் சுமையானது நாட்டின் பொருளாதார, சமூக அபிவிருத்தியை கேள்விக்குறியாக்கும். ஆதலால் இலங்கை அரசானது காயங்களைத் தடுத்தல் மற்றும் பராமரித்தல் என்பவற்றை முக்கிய விடயமாகக் கருதுகிறது.

இதனால் சுகாதார அமைச்சு துறைசார் வல்லுநர்கள் அரசாங்க அதிகாரிகள் மற்றும் பங்குதாரர்களின் உதவியுடன் காயங்களைத் தடுத்தல் மற்றும் பராமரித்தல் சம்பந்தமான தேசியக் கொள்கையையும் தந்திரோபாயம் உருவரைச் சட்டகத்தையும் உருவாக்க எத்தனித்துள்ளது.

***தற்போதைய கொள்கை ஆவணத்தில் அடங்கியுள்ள விபரங்கள்***.– தேசியக் கொள்கையானது எதிர்பாராது தற்செயலாக ஏற்படும் காயங்களைத் தடுப்பதற்குக் கீழ்வரும் முறைகளைக் குறிப்பிடும் :

***ஆரம்ப தடுப்பு***.– இது காயங்கள் ஏற்படும் சந்தர்ப்பங்களைக் குறைக்கும் முகமாக பாதுகாப்பான நடத்தை, சூழல் மற்றும் சட்ட அமுலாக்கலை முன்னிறுத்தும்.

***இடைநிலைத் தடுப்பு***.– காயங்களை நேரத்தோடு இனங்கண்டு அதற்குச் சரியான முறையில் சிகிச்சை அளிப்பதன் மூலம் பாரதூரமான விளைவுகளைத் தவிர்த்தல் (மருத்துவமனைக்கு வருவதற்கு முன்னரான கவனிப்பு, அவசரகால கவனிப்பு).

***மூன்றாம் நிலை தடுப்பு***.– காயங்கள் ஏற்பட்ட பின் அங்கவீனம் ஏற்படுவதைக் குறைத்தல் மற்றும் அங்கவீனத்தைப் பராமரித்தல் (புனருத்தாபனம்).

திட்டமிட்டு ஏற்படுகின்ற காயங்களை உளச் சுகாதார கொள்கை விளிக்கின்றது. இடைநிலைத் தடுப்பு மற்றும் மூன்றாம் நிலை தடுப்பின் சில பகுதிகளானது சகலவிதமான காயங்களுக்கும் பொதுவாக நோக்கப்படுகிறது. அதனால் இக்கொள்கையானது சேவைக் கட்டுமானங்களை விரிக்கின்றது. பேரழிவுகளுக்குத் தயாராதல் கொள்கையானது சேவை வழங்கல் சம்பந்தமான பகுதிகளுடன் ஒத்துப்போகின்றது.

**நோக்கம் :** திடீர் விபத்துக்களால் காயங்கள் அற்ற இலங்கை.

***பணி*** : மக்களின் நாளாந்த வாழ்க்கையில் காயங்கள் அடிக்கடி ஏற்படும் அளவையும் தீவிரத் தன்மையையும் குறைக்கும் தடுப்பு மூலோபாயங்களை மேற்கொள்ளல்.

**கொள்கை இலக்கு :** இலங்கையில் காயங்கள் ஏற்படல் காயங்கள் காரணமாக நோய்வாய்ப்படல், அங்கவீனமாதல் மற்றும் மரணங்கள் ஏற்படுத்துவதைக் குறைத்தல்.

***முக்கிய மூலோபாயங்கள்*** : கீழே குறிப்பிடப்பட்டுள்ள மூலோபாயங்கள் முன்னுரிமை அடிப்படையில் கொள்கை இலக்குகளை ஈடேற்றிக்கொள்வதற்காக இனங்காணப்பட்டுள்ளன :

(1) காயங்களைத் தடுத்தல் பற்றிய ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை வலுப்படுத்தல்

(2) காயங்களினால் ஏற்படும் பாதிப்புகள் பற்றியும் அவற்றைத் தடுப்பது பற்றியும் மக்களுக்கு விழிப்பூட்டல்

(3) காயங்களைத் தவிர்ப்பதற்கு சட்ட மற்றும் ஒழுங்க நெறிமுறைகளைச் சிபார்சு செய்தல்

(4) பாதுகாப்பான சூழலைத் திட்டமிடல் மற்றும் விருத்தி செய்வதற்கு மக்களையும் பங்காளிகளையும் வலுவூட்டல்

(5) திடீர் சிகிச்சை மற்றும் மீள்சீரமைப்பு நடவடிக்கைகளுக்காக மருத்துவமனையில் அனுமதிக்குப் பின்னான சிகிச்சை மற்றும் நிறுவன ரீதியான சிகிச்சைகளை வலுப்படுத்தல்

(6) காயங்கள் பற்றிய தகவல் முறைமையை வலுப்படுத்தலும் ஆய்வுகளை மேற்கொள்ள ஊக்குவித்தலும்

***மூலோபாயங்களின் குறிக்கோள்கள்***.– மேலே சொல்லப்பட்ட ஒவ்வொரு மூலோபாயத்திற்கும் பிரதானமானதும் முனைப்பானதுமான குறிக்கோள்கள் இனங்காணப்பட்டுள்ளன.

***மூலோபாயம் 01*** :

* விபத்துக்கள் காரணமாக ஏற்படும் காயங்களைத் தடுப்பதற்குக் கூட்டுச் செயற்பாடுகளை வலுப்படுத்தல்.

***எதிர்பாராத காயம்*** : வரைவிலக்கணம் இணைப்பு I இல் உள்ளது.

**குறிக்கோள்கள் :**

(1) காயங்களைத் தடுப்பதற்கான தேசிய குழுவை (NCPI) வலுப்படுத்துவதன் மூலம் விபத்துக்களைத் தடுக்கும் இணைப்பு பொறியமைப்பு மற்றும் கூட்டு செயற்பாட்டை வலுவூட்டல் (சுகாதார, போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி, மோட்டார் வாகனங்கள் திணைக்களம், தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, பொலிஸ், தொழிலாளர், தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய தேசிய நிறுவகம், கல்வி, நீதிமன்றங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள், சமூக சேவை, பொது திறைசேரி, ஊடக அமைச்சு மற்றும் காப்புறுதி சபை என்பவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்தப்படல் வேண்டும்.)

(2) தேசிய, பிரதேச மற்றும் சமுதாய அடிப்படையில் திட்டமிடல் மற்றும் அமுலாக்கல்.

**மூலோபாயம் 02 :**

* காயங்களின் தீவிரத் தன்மை, காயங்களைத் தடுத்தல் பற்றி மக்களுக்கு விழிப்பூட்டல்.

**குறிக்கோள்கள் :**

(1) அநேக காயங்களைத் தடுத்துக்கொள்ள முடியுமென கொள்கை வகுப்போர், தொழிலாண்மையாளர் மற்றும் பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தலும் உணரவைத்தலும்.

(2) விபத்துக்களால் ஏற்படும் காயங்களைத் தடுப்பதற்குக் கூட்டிணைந்த பாட விதானம் ஒன்று ஆரம்ப, இரண்டாம் நிலை பாடசாலை மாணவர் மத்தியிலும் மற்றும் பட்டப்படிப்பு மாணவர் மத்தியிலும் உள்வாங்கப்படுதலும் விருத்தி செய்தலும்.

(3) ஏற்புடைய திணைக்களங்களில் சேவை சார்ந்த பயிற்சி அளிப்பதற்காக விபத்துக்களைத் தடுத்தல் பற்றிய விழிப்பூட்டல் நிகழ்ச்சித் திட்டங்களை உள்ளடக்குதலும் விருத்தி செய்தலும்.

(4) காயங்களைத் தடுத்தல் தொடர்பாக முனைப்புடன் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஆட்களையும் குழுக்களையும் ஊக்குவித்தல்.

(5) விபத்துக்களைத் தடுத்தல் மற்றும் பாதுகாப்பு மேம்பாடு கருதி காத்திரமான எண்ணப்பாங்கைச் சகலரிடத்திலும் ஊக்குவித்தல்.

**மூலோபாயம் 03 :**

* காயங்களைத் தடுத்தல் தொடர்பாக உள்ள சட்டம் மற்றும் ஒழுங்குமுறை பொறிமுறையொன்றைப் பேணுதல்.

**குறிக்கோள்கள் :**

(1) நடைமுறையிலுள்ள ஒழுங்குமுறைகள், சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை அமுல்படுத்தலும் வலுப்படுத்தலும்.

(2) தரங்களின் சரியான நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்களை வரைப்படுத்தல் அத்துடன் தயாரித்தல்.

(3) நடைமுறையிலுள்ள ஒழுங்குமுறைகளில் குறைபாடுகள் மற்றும் அவற்றின் அமுல்படுத்துகையிலுள்ள பலவீனங்களை இனங்காணல்.

(4) காயங்களைத் தடுத்துக்கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்கு ஏதுவாக ஒழுங்குமுறைகள் மற்றும் ஒழுங்குவிதிகளை அறிமுகஞ் செய்தல் அத்துடன் நவீனமயப்படுத்தல்.

**மூலோபாயம் 04 :**

* பாதுகாப்பான சுற்றாடலைத் திட்டமிடல் மற்றும் விருத்தி செய்துகொள்வதற்கேதுவாக மக்களுக்கும் பங்காண்மையாளருக்கும் அதிகாரம் வழங்கல்.

**குறிக்கோள்கள் :**

(1) தனிப்பட்ட ஆட்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கும் அதிகாரங்களை வழங்குவதன் மூலம் மக்களின் பாதுகாப்பை மேம்படுத்தல்.

(2) அனைத்து அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் பிரதான அம்சங்களாக காயங்களிலிருந்து பாதுகாத்தல் மற்றும் காயங்கள் அற்றதெனச் சான்றுப்படுத்தல்.

(3) மனிதனால் ஏற்படும் தவறுகள் காரணமாக ஏற்படும் காயங்களை குறைத்துக் கொள்வதற்கான சூழலை உருவாக்குதல்.

**மூலோபாயம் 05 :**

* காயங்களுக்கு உள்ளானவர்களுக்கு, ஆகக்கூடிய சிகிச்சைகளை வழங்கல் மற்றும் மீள்சீரமைப்பை வலுப்படுத்தல்.

**குறிக்கோள்கள் :**

(1) காயங்களுக்கு உட்பட்டவர்களுக்கு மருத்துவமனைக்கு அனுமதிக்க முன்னரான சிகிச்சையை வலுப்படுத்தல்.

(2) ஆரம்ப மட்ட சுகாதார நிறுவனங்களில் அடிப்படை அவசர சிகிச்சை வழங்குவதற்குள்ள ஆற்றலை வலுப்படுத்தல்.

(3) இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சுகாதார சிகிச்சை நிறுவனங்களில் திடீர் சிகிச்சை வழங்குவதற்குள்ள ஆற்றலை வலுப்படுத்தல்.

(4) ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை சிகிச்சை நிறுவனங்களில் உகந்த மீள்சீரமைப்பு சிகிச்சை மற்றும் இணைந்த சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குள்ள ஆற்றலை வலுப்படுத்தல்.

(5) சகல மக்களினதும் மீள்சீரமைத்தல் சேவைகள் மற்றும் இணைந்த சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்குள்ள ஆற்றலை வலுப்படுத்தல்.

**மூலோபாயம் 06 :**

* காயங்கள் பற்றிய தகவல் முறைமை மற்றும் ஆய்வுகளை விருத்தி செய்தலும் வலுப்படுத்தலும்.

**குறிக்கோள்கள் :**

(1) காயங்கள் பற்றிய தேசிய கண்காணிப்பு முறையொன்றைத் தயாரித்து அமுல்படுத்தல்.

(2) பங்குதாரர்கள் மற்றும் மக்களிடையே தகவல்களை காலத்திற்குக்காலம் கொண்டுசெல்ல பொறிமுறையொன்றைத் ஸ்தாபித்தல்.

(3) காயங்களைத் தடுத்தல் தொடர்பான ஆய்வுகளைச் செய்வதற்தகு முக்கிய பிரச்சினைகளை இனங்காணல்.

(4) காயங்களின் தகவல்கள் பற்றிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக ஆராய்ச்சிகளை நடாத்துதல், ஆராய்ச்சிகளை மற்றும் நடைமுறைப்படுத்தல்.

(5) குறிப்பிட்ட நேரத்தில் சகல பிரிவினர்களுக்கும்க வருடாந்த அறிக்கை விநியோகித்தல்.

**இணைப்பு பற்றிய பொறிமுறை**.- தேசிய மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் பொருத்தமான இணைப்பு பொறிமுறை நிறுவப்படும். சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவு காயங்களில் இருந்து தடுக்கும் மத்திய மையமாவதுடன் இந்நாட்டிற்கு காயம் தொடர்பான தேசிய கொள்கை செயற்படுத்தும்போது செயற்பாடு மற்றும் இணைப்பு மையமாக செயற்படுகின்றது.

காயங்கள் தொடர்பாக தேசிய கொள்கை மற்றும் மூலோபாயத் திட்டங்கள் நாடளாவிய ரீதியில் செயற்படுகின்றதை உறுதி செய்வதற்கு தொற்றா நோய்ப் பிரிவின் பணிப்பாளரினால் பலதரப்பட்ட பிரிவுகளுடன் இணைந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன், கொள்கையைச் செயற்படுத்தும்போது சிறந்த வளங்கள் உபயோகிக்கப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்காகக் காயங்களைத் தடுத்தல் மற்றும் முகாமைத்துவப்படுத்தலுக்கான வேலைத்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றது.

தொற்றா நோய்ப்பிரிவு பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலின்கீழ் தொற்றா நோய்ப் பணிப்பாளரின் நிர்வகிக்கப்படுகின்றது. விபத்துக் கொள்கையைச் சிறப்பாகச் செயற்படுத்துவதற்காகத் தனி வரவு செலவுத் திட்டம் பேணப்படுகின்றது.

***காயங்களைத் தடுத்தல் பற்றிய தேசிய குழு.*** - *காயங்களைத் தடுப்பதற்கான தேசிய குழு, தேசிய கொள்கையை அமுல்படுத்துவதற்காக பிரதான ஆலோசனைச் சபையாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் தலைமைத்துவத்தை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வகிப்பதோடு, ஏற்புடைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகள் அதில் அங்கத்துவம் வகிப்பர். காயங்களைத் தடுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கு அவசிய உள்ளக தரப்பினரின் செயற்பாடுகளை விதப்புரை செய்தல் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல், கொள்கை நடைமுறைகளை அமுலாக்கும் தாக்கத்தை மதிப்பீடு செய்தல், தேவையானபோது தேசிய கொள்கையை நவீனமயமாக்குவதற்கு ஆலோசனை வழங்குதல், ஏற்புடைய தரப்பினர்களின் ஊடாக தேசிய கொள்கையை அமுல்படுத்தல், சிறந்த பரிசீலனைகளை மேற்கொள்ளல், தேசிய சுகாதார சபைக்கும் மற்றும் மாகாண சபைகளுக்கும் ஆண்டறிக்கைகளை வழங்குதல் மற்றும் தேசிய சுகாதார சபைக்கு ஆலோசனை அத்துடன் அவசிய முக்கிய விடயங்களை எடுத்துக்காட்டி காயங்களைத் தடுத்தல், நடவடிக்கை தேசிய குழுவினால் மேற்கொள்ளப்படும் காயங்களைத் தடுத்தல் தேசிய குழு 2 மாதங்களுக்கு ஒரு தடவை கூடுதல் வேண்டுமென்பதோடு, கொள்கை அமுலாக்கம் தொடர்பாக சுகாதார அமைச்சின் செயலாளருக்கு வகைப் பொறுப்பு கூறுதல் வேண்டும்.*

***காயங்கள் பற்றிய தொழில்நுட்ப ரீதியான செயற்பாட்டுக் குழு.*** - *இக்குழு 8 முதல் 10 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைவதோடு, தொற்றா நோய்ப் பிரிவின் பணிப்பாளரின்கீழ் இயங்கும் செயலாற்றல் அவசியப்பாட்டுக்கு அமைய உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க இயலுமாவதோடு, அதில் எதிர்பார்த்த உறுப்பினர்கள் ஏற்புடைய பணிப்பொருளாளரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் சேர்க்கப்படுவர்.*

*மேற்கோள்கள் :*

*பின்னிணைப்பு "அ"*

*உலக சுகாதார ஸ்தாபனத்தினால் பாவனையில் உள்ள காயத்தின் நியம வரைவிலக்கணமாவது : "இயக்க சக்தி வெப்பம், மின்சாரம், இரசாயனப் பொருட்கள், அணுக்கதிரியக்கம் போன்ற பௌதீக காரணிகளுக்கு உடலானது திடீரென்று வெளிப்படுத்தப்பட்டு மனித தாக்குதிறன் அளவுக்கு அதிகமான அளவில் அல்லது வீதத்தில் அவை உடலோடு செயலாற்றும்போது காயங்கள் ஏற்படுகின்றன. சில சந்தர்ப்பங்களில் அத்தியாவசியமான காரணிகளாகிய ஒட்சிசன் (பிராணவாயு) அல்லது வெப்பம் திடீரெனக் குறைவதன் மூலம், உதாரணம் : நீரில் மூழ்கல் உறைந்த பனிக்குள் நீண்ட நேரம் வெளிக்காட்டப்படுவதால் உடலின் நுனிப்பகுதிகளுக்குப் பாதிப்பு ஏற்படல்* (frostbite) *காயங்கள் ஏற்படுகின்றன."*

(WHO2002)

*இது உடற்றொழில் தாக்குதிறன் அளவுக்கு அதிகமான அளவுகளில் சக்திக்குத் திடீரென்று வெளிப்படுத்தப்படுவதால் ஏற்படும் உடற்சிதைவாகவோ, அல்லது நீரில் மூழ்கல், நெரிக்கப்படுதல், பனிக்கட்டி உறைதல் போன்றவற்றினால் ஏற்படும் ஒன்றோ அல்லது அதிகமான இன்றியமையாத அடிப்படைக் கூறுகளின் தடங்கலாகவோ இருக்கலாம். சக்திக்கு வெளிக்காட்டப்படுவதற்கும் காயம் தோன்றுவதற்கும் இடையிலான நேரம் குறுகியதாகும்.* (WHO2002)

*காயங்களுக்குக் காரணமாகவுள்ள சக்திகள் :*

*(1) இயக்க சக்தி (உதாரணம் : ஒரு மேற்பரப்பு சக்தி அல்லது வாகனம் போன்ற இயங்கும் பொருளினால் அல்லது நிலையான பொருளினால் ஏற்படும் தாக்கம்).*

*(2) கதிர்வீச்சு அல்லது கதிரியக்க சக்தி (உதாரணம் : பார்வையிழக்கச் செய்யும் வெளிச்சம் அல்லது குண்டுவெடிப்பு மூலம் உருவாகும் அதிர்ச்சி அலை).*

*(3) வெப்ப சக்தி (உதாரணம் : அதிக சூடான அல்லது அதிக குளிரான வளி அல்லது நீர்).*

*(4) மின்சக்தி.*

*(5) இரசாயனப் பொருட்கள் (உதாரணம் : விஷம் அல்லது மதுபானம் போதைப் பொருள் போன்ற போதையேற்றும் அல்லது உளநிலையை வேறுபடுத்தும் பொருட்கள்).*

*காயங்களாவன, நோய்களினதும் தொடர்புடைய சுகாதாரப் பிரச்சினைகளினதும் சர்வதேச புள்ளிவிவரப் பாகுபாடு, பத்தாவது திருத்திய பதிப்பின்* (ICD 10), 19 *ஆம்*, 20 *ஆம் அதிகாரங்களில் நிரற்படுத்தப்பட்ட தீவிர, பௌதீக நிலைமைகளாகும்.*

காயத்துக்கான மேற்குறிப்பிடப்பட்ட வரைவிலக்கணமானது நீரில் மூழ்கல் (ஒட்சிசன் குறைபாடு), உடல் வெப்பம் குறைதல் (வெப்பக் குறைவு), நெரிக்கப்படுதல் (ஒட்சிசன் குறைவு), அழுத்தக் குறைப்பு நோய்நிலை (அதிக நைற்ரஜன் சேர்வைகள்), நஞ்சேற்றல் (விஷப் பதார்த்தங்களின் மூலம்) ஆகியவற்றை உள்ளடக்குகின்றது.

தொடர்ச்சியான அழுத்தத்தினால் ஏற்படும் நிலைமைகளான மணிக்கூட்டுக் குகை நோய் (Carpal Tunnel Synd) நாட்பட்ட முதுகு வேதனை, தொற்று நோயினால் உருவாகும் நஞ்சேற்றம் போன்றவற்றை இது உள்ளடக்குவதில்லை. மனநோய் நாட்பட்ட உடல் ஊனங்கள் போன்றவை பௌதீக காயங்களின் இறுதி விளைவுகளாகக் காணப்பட்ட போதிலும் இவையும் மேற்குறிப்பிட்ட வரைவிலக்கணத்தின்படி விலக்கப்பட்டுள்ளன. (WHO2002)

**அமுலாக்கம் :**

இடைக்கால தொழிற்பாட்டுத் திட்டம் ஒன்று (3-5 வருடங்கள்) மற்றும் ஆண்டுத் திட்டங்கள் என்பன இச்செயல்திட்ட கட்டுக்கோப்பிலிருந்து வகுத்தமைக்கப்படுதல் வேண்டும். காயங்களைத் தடுத்தல் மற்றும் முகாமை செய்தல் மீதான செயல்திட்டமானது மாகாண, மாவட்ட மட்டத்தில் அமுலாக்கத் திட்டங்களைத் தயாரித்தலுக்கு வழிகாட்டுதல் வேண்டும்.

இந்த வேலைத்திட்டம் மிகவும் வசதியாக செயற்படுத்துவதாக உறுதி செய்வதற்காக சுகாதார அமைச்சுடன் இணைந்ததாகச் செயற்படுத்துவதற்கு விபத்துக்களைத் தடுத்தல் தொடர்பாக மாகாண பிரதேச குழு ஒவ்வொரு மாகாணம்/பிரதேசங்களுக்குமான நிர்மாணித்தலுக்கு சிபார்சு செய்கிறேன்.

அரச சார்பற்ற அமைப்புகள் மற்றும் சமூக குழுக்கள் (இளைஞர் சேவைக் குழு, கிராம எழுச்சி மற்றும் நலன்புரி சங்கங்கள் ஆகிய) என்பவற்றுடன் ஒன்றுசேர்ந்து விபத்துக்களைத் தடுக்கும் செயற்பாடுகள் என்பவற்றின் மூலம் அந்த வெளிப்பாட்டை அடித்தள மட்டத்திலிருந்து கொண்டுசெல்லல் மிகவும் உதவியாக இருக்கும்.

**மேற்பார்வையும் மதிப்பிடலும் :**

இடைக்கால வருடாந்த திட்டத்திற்கமைய மேற்பார்வையும் மதிப்பிடலும் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் மூலம் தாபன மட்டத்திற்குள், தேசிய மட்டத்திற்குள்ளும், அரை தேசிய மட்டத்திலும் பயன்படுவதன் செயற்திறன் தெளிவாக அறியப்படும். முறையான மேற்பார்வை இம்மட்டங்களில் செயற்படுத்தப்படும்.

01-294

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.